# THE MESSAGE OF THE HOUR OUTREACH

CALEB JOSHUA
Tele: 04630 456157

"HOREB"
SRIVAIKUNTAM – 628 601.
THOOTHUKUDI DIST.

## தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

## மற்றும் உற்பத்தி செய்யப்படும்

## அந்நிய அக்கினி ஸ்தம்பம்

1. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காக, கர்த்தரால் சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவனாகிய நான், பிதாவாகிய தேவனால் பரிசுத்தமாக்கப் பட்டவர்களுக்கும், இயேசு கிறிஸ்துவினால் காக்கப்பட்டவர்களுமாகிய அழைக்கப்பட்டவர்களுக்கும் எழுதுகிறதாவது :

உங்களுக்கு இரக்கமும் சமாதானமும் அன்பும் பெருகக்கடவது.

2. இந்நாட்களில் சிலர், தங்களுடைய ஊழியத்தை மிகைப்படுத்திக் காட்ட, இதோ பாருங்கள் நான் தேவனால் கனமான ஊழியத்துக்காக அழைக்கப்பட்டவன், ஆதலால் தான் தேவன் தாமே அக்கினி ஸ்தம்பத்தில் பிரசன்னமாகி, அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும் என் ஊழியத்தைக் குறித்து சாட்சிக் கொடுத்து, என் அழைப்பையும், ஊழியத்தையும் உறுதிப்படுத்தி வருகிறார் என மனுஷ ஞானத்துக்குறிய நயவசனத்தினாலும் வசனிப்பினாலும் பொய்யை நம்பும் ஜனங்களுக்கு ஒரு பொய்யைக் கூறி, அதற்கு ஆதாரமாக அநேக புகைப்படங்களை வெளியிட்டு கபடில்லாதவர்களுடைய இருதயத்தை வஞ்சித்து வருகிறார்கள். அரசியல்வாதிகள் சமூகசேவை என்ற போர்வையின் கீழ் நாட்டையும், மக்களையும் கொள்ளையடித்து பெரும் வாழ்வு வாழ்வது போன்று, இவர்களும் கர்த்தருடைய ஊழியம் என்ற போர்வையின் கீழ் மக்களை ஏமாற்றி நய வசனிப்பினாலும், வஞ்சகத்தினாலும் சேகரிக்கும் காணிக்கை, தசமபாகம் இவைகளைக் கொண்டு தங்கள் வயிற்றுக்கே ஊழியம் செய்து, தங்கள் வீட்டுக்கு பொல்லாத ஆதாயத்தை தங்கள் சுய வருமானத்திற்கு அதிகமாக தேடிக்கொள்கிறார்கள். தங்கள் சுய விளம்பரங்களுக்காக வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலமாக இக்காலத்துக்குரிய செய்தி நாடு முழுவதும் செல்லுகிறது என்ற மாயையில் மக்களை ஏமாற்றுகிறார்கள். இந்த நிகழ்ச்சிகளுக்ககாக காணிக்கை, நன்கொடைகளை நன்றாக குலுக்கி , அமுக்கி, நிரப்பி கொடுங்கள் என்று தங்கள் பத்திரிக்கைகளில் விளம்பரம் பண்ணுகிறார்கள். இது என்ன?

**" மக்களே , பெருந்தொகையான பணத்தை சேகரிக்கும் பொருட்டு வானொலி, தொலைகக்காட்சி நிகழ்ச்சிகளுக்கென தங்களை ஈடுபடுத்திக் கொள்ளுகிறார்கள். நான் கூறுவது முற்றிலும் உண்மை. அது தேவனுக்குரியது அல்ல".** (இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்தல். 2ம்பாகம், பக்கம் 868, பத்தி 161 )

3. But man wanted to be like, they compare, or to copy after, go like the-the world does, say the things that they do, make a success the way they were a success. We cannot never be a success doing anything the world does. We can only be a success as we follow after God's statutes and His way of doing things. We can never be, by patterning after the world. If the cigarette company has met their greatest success by television and the beer and the whiskey crowds has made their great success through the contribution of television, that's no sign that the church shall make its success by television. The success of the church lies within the preaching of the Gospel, of the Power of God, and the demonstration of the Spirit. We cannot say because that television done such-and-such for the cigarette company and the –and the other companies! We do not have any Scripture to try to compare with them people. And as long as we do, we may draw great numbers of people, but that's not what God ordained us to do. We think because that we're all colors, flying high, great organizations, causing great colorful things to take place, that

it's a success. We are dying daily on our feet, spiritually speaking ! If we stood ten-million strong this morning, and the Holy Spirit wasn't with us, we'd do well to stand ten strong with the Holy Spirit with us. We cannot compare with the world. ( A Deceived Church, by the world. Page 70, Para 13 )

4. You can be popular, you'd have even body pulling you on the back, money flowing in from every where for a radio, televisions and sofar. They said they would take it and televise it. I don't believe in taking God's things and pulling them out on such a vulgarity stuff of the world. We are servants just serve the Lord, just do as God said. (The Easter Seal. Page 29, para 170 / 2.4.1961)

இப்படிப்பட்ட காரியங்களில் தங்களை ஈடுபடுத்திக் கொள்பவர்கள் யார்? மாய்மாலக்காரர்கள். "காகம் வித்தியாசமானது. கூர்ந்து பார்ப்பின், காகம் ஒரு மாய்மாலக்காரனுக்குச் சமம். (Hypocrite). காக்கை பிணத்தை தின்றுவிட்டு, வயலுக்குச் சென்று தானியத்தையும் தின்னும்.... அவ்வண்ணமாகவே, ஒரு போலி அவிசுவாசி கர்த்தரின் பந்தியிலும் பிசாசின் பந்தியிலும் பங்கெடுப்பான். மறுபிறப்பு பிறந்த விசுவாசி தப்பிதங்களை பொறுக்கமாட்டான். சத்திய வார்த்தை அவனுக்கு ஆகாரமாயிருக்கும்." (சபையும் அதன் நிலையும். பக்கம் 9, பத்தி 28,29 )

ஆதலால் இக்காலத்துக்குரிய செய்தியில் இருக்கிறோம் என்று உங்களை அழைத்துக்கொள்ளும் நீங்கள் இப்படிப்பட்டதான வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் நாட்டமுள்ளவர்களோடு உங்களை ஈடுபடுத்திக் கொள்ளாதீர்கள். உங்கள் விசுவாசத்தை வெளிப்படுத்துவது உங்கள் கிரியைகள் என்பதை மறந்துவிடாதீர்கள்.

5. நமது வீடுகளில் தொலைக்காட்சிப் பெட்டி வைப்பது குறித்து இக்காலத்துக்குரிய செய்தியில் உள்ள போதனைகள் என்ன?

" தன் வீட்டில் தொலைக்காட்சிப் பெட்டியை வைத்திருக்கும் ஸ்திரீயிடமிருந்து நாங்கள் வாடகைக்கு வாங்குகிறோம். என் வீட்டில் தொலைக்காட்சிப் பெட்டி வைத்துக் கொள்ள எனக்குப் பிரியமில்லை, இல்லை, ஐயா. அது என் வீட்டில் இருப்பது எனக்குப்பிரியமில்லை. அதை துப்பாக்கியினால் சுட்டு உடைத்துவிடுவேன். அந்த பொல்லாத காரியத்தோடு யாதொரு தொடர்பும் கொள்ள எனக்குப் பிரியமில்லை" ( மறுரூபப்படுத்த தேவனுடைய வல்லமை. பக்கம் 44, பத்தி 169 / 11.9.1965)

சகோ.பிரன்காமே, தொலைக்காட்சி, உலகத்துக்கே ஒரு சாபம் என்று நான் நினைக்கிறேன், நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அன்பார்ந்த நபரே, நீங்கள் யாராயிருந்தாலும் உங்களுடன் நான் நிச்சயம் இணங்குகிறேன். அது மானிட வர்க்கத்துக்கே மிகவும் வெறுக்கப்படத்தக்க ஒன்றாக உள்ளது. (பரிசுத்த ஆவியின் பேரில் கேள்விகளும் பதில்களும். பக்கம் 35, பத்தி 88)

YOU'LL DIE IN YOUR TELEVISION ONE OF THESE DAYS, AND GO TO HELL IN THE SAME THING. ( The unwelcomed Christ. Page 32, Para 242 / 11.9.1955)

**" எங்களிடத்தில் தொலைக்காட்சிப் பெட்டி கிடையாது. என் வீட்டில் என்றைக்குமே ஒன்று இராது. நீங்கள் ஒன்றை வைத்துக்கொள்ள விரும்பினால், அது உங்களைப் பொறுத்தது. அதை வைக்க வேண்டாம் என்று தேவன் என்னிடம் கூறினார் "** (மறுரூபப்படுத்தும் வல்லமை. பக்கம் 66, பத்தி 242 / 31.10.1965 )

" நான் தொலைக்காட்சியை விரும்புவதில்லை. உங்களுக்கு தெரிந்துள்ளபடி, அதற்கு நான் விரோதம்" ( அறுப்பின் நேரம். பக்கம் 6, பத்தி 17/12.12.1964)

பாருங்கள், தொலைக்காட்சிப் பெட்டியை உன் வீட்டில் வைக்காதே என்று ஏழாம் சபை கால தூதனிடம் கூறிய தேவன், தம்முடைய இக்காலத்துக்குரிய செய்தியை எடுத்துச் சொல்ல தொலைக்காட்சி நிகழச்சிகளை அனுமதிப்பாரா? ஒரு காலும் மாட்டார். **தேவன் இக்காலத்துக்குரிய செய்தியை எடுத்துச் செல்ல தம்முடைய சுயவழியை வைத்திருக்கிறார். The seeds will go in news papers, reading material, until every predestinated Seed of God has heard it. (CoD. Q & A 171, Page 724, Para 179)**

யூதாஸ் ஞானஸ்நானம் பெற்றபோது பிசாசும் ஞானஸ்நானம் பெற்றது. யூதாஸ் சுவிசேஷத்தை பிரசங்கிக்கச் சென்றபோது அவனுடன் பிசாசும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கச் சென்றது. ஆனால் பிசாசு பரிசுத்த ஆவியை பெற முடியாது. பரிசுத்த ஆவியினால் சுவிசேஷத்தை பிரசங்கியாத அநேக கள்ள, கபடமுள்ள வேலையாட்கள் நம் மத்தியில் ஏராளம் ஏராளம் உண்டு. இவர்களை இவர்களது கனியிலிருந்து அடையாளம் கண்டுகொள்ள முடியும். உங்கள் மனதை மயக்கும் கபடமுள்ள வேலையாட்களை தேவனுடைய வார்த்தையைக் கொண்டும், இக்காலத்துக்குரிய செய்தியைக் கொண்டும் அடையாளம் கண்டு அவர்களை விட்டு விலகுங்கள்.

**6. ஆகாதவர்கள் வழி வாய்க்கிறதென்ன? துரோகஞ் செய்துவருகிற அனைவரும் சுகித்திருக்கிறதென்ன? நீர் அவர்களை நாட்டினீர், வேர் பற்றித் தேறிப்போனார்கள். கனியும் கொடுக்கிறார்கள். நீர் அவர்கள் வாய்க்குச் சமீபமும், அவர்கள் உள்ளிந்திரியங்களுக்கோ தூரமாயிருக்கிறீர். எரே.12:1,2.**

7. சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது. ஏவாளை வஞ்சித்தது. அவளை தேவனுடைய வார்த்தையை விட்டு விலகச் செய்தது. இக்கடைசிக் காலத்திலும் நம்முடைய எதிராளியாகிய பிசாசானவன் கெர்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். இது ஆச்சரியமல்ல. சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக் கொள்வானே. 2கொரி. 11:14. ஆனால் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் வஞ்சிக்கப்பட முடியாது. இந்நாட்களில் வேதபோதனை அவ்வளவு நெருக்கமாயிருக்கும். அது உண்மையானதைப்போல் மிகவும் நெருங்கியிருந்து, கூடுமானால் தெரிந்துகொள்ளப் பட்டவர்களைத்தவிர மற்றெல்லாரையும் வஞ்சிக்கும். ஆவிக்குரியவர்கள் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறார்கள். 1கொரி. 2:15 . இவர்கள் எந்ததொரு சம்பவத்தையும், காரியத்தையும் ஆவிக்குரிய ரீதியில் நிதானித்துப்பார்த்து செயல்படுகிறார்கள். இவர்கள் அற்புத அடையாளங்களைக் கண்டு சாதுரியமான பேச்சை நம்பி, சிறந்த வசனிப்போடும் ஞானத்தோடும் கூடிய பிரசங்கத்தை நம்பி எந்த ஒரு காரியத்தையும் உறுதிப்படுத்த மாட்டார்கள். அவைகள் யாவும் தேவனுடைய வார்த்தையோடு இசைந்து போகிறதா என்று ஆராய்ந்து, இசைந்தால் மட்டுமே ஏற்றுக்கொள்வார்கள்.

8. நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் காலம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையின் வேளையில் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாக கொடிய வஞ்சகத்தை தேவன் அவர்களுக்குள்ளே அனுப்பும் காலமாயிருக்கிறது. 2தெச. 2:1,11,12. இது வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தைவிட்டு விலகிப்போகும் காலமாயிருக்கிறது. 1தீமோ. 4:1 இக்காலம் குறித்து லவோதிக்கேயா சபை தூதன் தன்னுடைய செய்தி: " சாத்தானின் ஏதேன் " பக்கம் 7, கடைசிப்பத்தியில் "சத்துரு நம்மை வஞ்சிக்கும் இந்நாட்கள் போன்று இதுவரை எக்காலத்தும் இருந்ததில்லை. இது பிசாசின் தந்திரமும், வஞ்சகமும் நிறைந்த நாட்களாகும். இந்நாட்களில் கிறிஸ்தவர்கள், முற்காலத்தில் வாழ்ந்த கிறிஸ்தவர்களைக் காட்டிலும் அதிக கவனமாக இருக்கவேண்டியது அவசியம்;" எனக் கூறுகிறார். ஆதலால் நாம் எந்த ஒரு ஊழியமும் அதனைச் சார்ந்த சம்பவங்களும் தேவனுடைய வாத்தையோடு இணையாவிட்டால் அதனோடு இணைந்து செயல்படக் கூடாது.

9. ஆக இந்நாட்களில் ஆவிக்குரிய வஞ்சிப்பு மிகக் கொடூரமாக இருப்பதால், அக்கினி ஸ்தம்பம் குறித்து உங்கள் மனது உண்மையினின்று விலகும்படி கெடுக்கப்படுமோ என்று பயந்து, நீங்கள் பிசாசின் கண்ணியில் விழாதபடிக்கு இதில் மனத்தெளிவுள்ளவர்களாயிருக்கவேண்டும் என்பதற்காக, என் தேவன் என் மனதில் அக்கினி ஸ்தம்பம் குறித்து உங்களுக்கு எழுதி உணர்த்துவதற்கான எண்ணத்தை உண்டாக்கினார்.

10. இந்தச் செய்தி எந்த ஒரு தனிப்பட்ட நபரையும் விரோதித்து எழுதப்படும் ஒன்று அல்ல. கிறிஸ்துவுக்குள் உண்மையைச் சொல்லுகிறேன் என்று பரிசுத்த ஆவிக்குள் என் மனச்சாட்சி எனக்கு சாட்சியாயிருக்கிறது. இந்நாட்களில் மும்பை மாநகரை மையமாகக் கொண்டு ஊழியம் செய்து வரும் தமிழ்நாட்டைச் சேர்ந்த சகோ.டேனியல் கிறிஸ்டியான் தன்னைக் குறித்து, தீர்க்கதரிசி ஏழு முத்திரைகளின் இரகசியத்தைக் குறித்து வெளிப்படுத்தும் போது "அந்தப் பட்டயத்தை உத்தமமும், உண்மையும் பொருந்தியவனும், சத்தியத்தை முழுவதுமாய் பிரசங்கிக்கும்

ஒருவனிடம் ஒப்படைக்க அருள்புரியும எனக் கூறியுள்ளார்.;" (ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு– பழைய பதிப்பு. பக்கம் 517. 2வது பத்தி) ஆதலால் தன்னைக் கொண்டு தேவன் ஒரு பெரிய எழுப்புதலைக் கொண்டு வரப்போகிறார் என்றும், மும்பை மாநகரிலிருந்து உலகம் முழுவதும் தன்னைக் கொண்டு செய்தி புறப்பட்டுச் செல்லும் என தன்னைக்குறித்தும், தன் ஊழியத்தைக் குறித்தும் மிகைப்படுத்தி, மேன்மைப்படுத்தி ஒரு கூட்டம் ஜனங்களை தனக்கு சாதகமாக ஆதாயப்படுத்தியுள்ளார். அந்நாட்களில் பாலாசீர் லாறிக்கு ஜீவபுத்திரன் என்ற ஒரு நபர் உண்டு. இவர்தான் பாலாசீர் லாறியை மனுஷகுமாரன் என்று பிரசித்தப்படுத்துவார். அதேபோன்று சகோ.டேனியலுக்கு ஜான் பாண்டியன் என்ற ஒரு நபர் உண்டு. இவர்தான் சகோ.டேனியலின் ஊழியத்தை மிகைப்படுத்தி பல இடங்களில் பிரசித்தப்படுத்தி வருகிறார். இவர் எனக்கு கூட காது குத்த முயற்சித்தது உண்டு. சகோ.டேனியலின் சீஷர்கள் இவரை தீர்க்கதரிசி, அப்போஸ்தலன், பாஸ்டர் என 5வகை ஊழியத்தையும் கொண்டு அழைப்பது உண்டு. அப்போஸ்தலன் என்று இவர் தன்னை அழைத்துக்கொள்ள இவரிடம் அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்கள் 2கொரி. 12:12 ன்படி ஒன்றும் காணப்படவில்லையே. அப்படியானால் இவர் ஒரு கள்ள அப்போஸ்தலனாகவே இருக்கவேண்டும்.( வெளி. 2:2)

11. இங்கு ஆவியானவர் என்னைக் கொண்டு அவருக்காகவும், அவருடையவர்களுக்காகவும், சபைக்காகவும் எழுதுவதை யாரும் தவறாக புரிந்துகொள்ளக் கூடாது. நான் கிறிஸ்துவை நேசிப்பதுபோல், என்னை நானே நேசிப்பதுபோல், அவரையும், அவருடையவர்களையம் நேசிக்கிறேன். நானும் சகோ.டேனியலும் ஒரு காலத்தில் ஊழியத்தில் பங்குபெற்றிருந்தோம். அந்த நாட்களை நான் இன்னும் மறக்கவில்லை. அவர் சத்தியத்தை விட்டு விலகி மோசம் போகும்போது அதை என்னால் பார்த்துக்கொண்டிருக்க முடியவில்லை. ஒரு ஊழியக்காரன் உண்மையாயிராவிட்டால் அதற்கு எதிராக ஒரு சத்தம் எங்கோ கூச்சலிட்டுக்கொண்டே இருக்கும். ஆதலால் தப்பிப்போன மார்க்கத்தினின்று அவரை திருப்ப முயற்சிக்கிறேன். என்னுடைய ஆலோசனைகளை ஏற்றுக் கொள்வது, நிராகரிப்பது அவர் விருப்பம். ஏனென்றால் அவருக்கு நியமித்த ஓட்டத்தில் அவர் ஓடவேண்டியவராயிருக்கிறார். தெயுதாஸ், கலிலேயனாகிய யூதாஸ் மற்றும் யூதாஸ் ஸ்காரியோத் போன்றவர்கள் அவர்களுக்கு நியமிக்கப்பட்ட ஓட்டத்தைத்தானே ஓடி முடித்தார்கள்.

12. சகோ.டேனியல் தனது " இடிமுழக்க எதிரொலி " என்ற பத்திரிக்கையின் மலர் 1 , இதழ் 3 ன் முன் பகுதியில் இவர் ஒருவருக்கு ஞானஸ்நானம் கொடுப்பதாக ஒரு புகைப்படம் பிரசுரித்து அத்துடன் " பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டும்." என எழுதி அதற்காக மாற்.2:10 வசனத்தை குறிப்பிட்டுள்ளார்.

அடுத்து மலர் 2, இதழ் 1 ல் இவர் ஒரு சிறு பெண்ணுக்கு ஓய்வுநாள் பள்ளி பரிசு வழங்குவதாக புகைப்படம் பிரசுரித்து, அத்துடன் " சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடம் கொடுங்கள். அவர்களை தடைபண்ணாதிருங்கள். பரலோக ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது" என எழுதி மத். 19:14 ஐ குறிப்பிட்டிருந்தார்.

இங்கு நான் கொடுத்திருப்பது ஒரு சில உதாரணங்கள் மட்டுமே. இப்படிப்பட்ட பிரசுரங்கள் அநேகம் உண்டு. ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். 1கொரி. 2:15. இவைகளின் பொருள் என்ன? இவர் தன்னை மனுஷகுமாரன்–இயேசு என்று மறைமுகமாக பறைசாற்றுகிறார்..

13. இதே பாணியில் தான் பாலாசீர் லாறி பக்தர்களும் மக்களை ஏமாற்றுகிறார்கள். இவர்கள் மறைந்த பாலாசீர் லாறியின் புகைப்படத்தை பிரசுரித்து, படத்துக்கு மேல் " குருதேவ் R.பாலாசீர் (லாறி) லஹரி கிருஷ்ணா " என்று எழுதியும் : புகைப்படத்தின் கீழ் "மரித்தேன், ஆனாலும் இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன். ஆமென்: நான் மரணத்திற்கும் பாதாளத்திற்கும் உரிய திறவுகோல்களை உடையவனாயிருக்கிறேன்." வெளி. 1:18 என விளம்பரம் செய்கிறார்கள். இதென்ன? பாலாசீர் லாறியை கிறிஸ்து என அறிக்கையிடுகிறார்கள்.

ஆக இரு சாராரும், ஒரே ஆவியில், ஒரே அணியில், ஒரே இருதயமும், ஒரே மனமுள்ளவர்களாக தங்கள் கிரியைகளை செய்து வருகிறார்கள். சூரியனுக்கு கீழே செய்யப்படுகிற காரியங்களையெல்லாம் கவனித்துப்பார்த்தேன்: இதோ எல்லாம் மாயையையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது என பிரசங்கி கூறுகிறான்.

14. சகோ. டேனியல், இந்நாட்களில் தனது ஊழியங்களில் அவ்வப்போது பற்பல கோணங்களில் அக்கினி ஸ்தம்பம் பிரசன்னமாகிறது எனக் கூறி, அதற்கு ஆதாரமாக அநேக புகைப்படங்களை பிரசுரிக்கிறார். எனக்கு இவரது பத்திரிக்கை தொடக்க காலங்களில் ஒழுங்காக அவ்வப்போது வந்து கொண்டிருந்தது. நான் இவரது கலாச்சாரத்திற்கு அவ்வப்போது எதிர்ப்பு தெரிவிக்க ஆரம்பித்ததால், பத்திரிக்கைகள் எனக்கு அனுப்பப்படுவது நிறுத்தப்பட்டது. ஆதலால் என் கைவசம் உள்ள சில பத்திரிக்கைகளை ஆதாரமாகக் கொண்டு இவரது அக்கினி ஸ்தம்பம் கலாச்சாரம் குறித்து எழுதுகிறேன்.

அ) 1994 வது ஆண்டு டிசம்பர் 31ம் தேதி புதுவருட ஆராதனையின் போது பழுப்பு நிறத் தோற்றத்தில் (Anber colour என்று அவர்கள் அழைக்கிறார்கள். Amber க்கு Anber என்று எழுதியுள்ளார் என நினைக்கிறேன்) அக்கினி ஸ்தம்பம் வெளிப்பட்டதாகவும்: அதேநாளில் இன்னொரு இடத்தில் நடந்த மற்றொரு புதுவருட ஆராதனையில் சகோ. டேனியலுக்கு பின்புறமாக அக்கினி ஸ்தம்பம் இறங்கி நின்றதாகவும், அதோடு மட்டுமல்ல அங்குள்ள கரும்பலகையில் இயேசு கிறிஸ்துவின் தத்ரூபமான தோற்றம் காணப்பட்டதாகவும் புகைப்படங்களை வெளியிட்டுள்ளார்.

ஆ) 8.6.97ல் சகோதரர், சில சகோதர சகோதரிகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் சமயம் அவருடைய கழுத்தைச்சுற்றிலும் அக்கினி ஸ்தம்பம் மாலை போல் பிரசன்னமாகி காட்சியளித்ததாகவும், பின் அதைத்தொடர்ந்து பல கோணங்களில் அக்கினி ஸ்தம்பம் தன்னை வெளிப்படுத்தியதாகவும் அநேக புகைப்படங்களை பிரசுரித்து வெளியிட்டுள்ளார். இதோடு நின்றுவிடாது, இதற்கு ஆதாரமாக ஏசா. 4:5 வசனத்தை குறிப்பிடுகிறார் " அப்பொழுது கர்த்தர் சீயோன் மலையிலுள்ள எல்லா வாசஸ்தலங்களிலும், அதின் சபைகளின் மேலும், பகலில் மேகத்தையும், புகையையும், இரவில் கொழுந்து விட்டு எரியும் அக்கினி பிரகாசத்தையும் உண்டாக்குவார். மகிமையானவைகளின் மேலெல்லாம் காவல் உண்டாயிருக்கும்." இதிலிருந்து இவர் ஏசா.4 வது அதி. எதைக் குறிக்கிறது என அறியவில்லை எனத் தெரிகிறது. தாறுமாறாக தன் மனம் போன போக்கில் தேவனுடைய வசனத்தை எடுத்து உபயோகிக்கிறார். ஏசா. 4:5 புதியபூமியில் தேவனிடத்திலிருந்து பரலோகத்தை விட்டு இறங்கிவரும் புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைக் குறித்தல்லவா கூறுகிறது. இதைக்குறித்து நீங்கள் மேலும் அறிய விரும்பினால் " பரலோக மணவாளன் மற்றும் பூமிக்குரிய மணவாட்டியின் வருங்கால இருப்பிடம் " என்னும் செய்தியில் 78ம் பக்கத்தில் வாசிக்கலாம்.

இ. இன்னும் சில வேளைகளில் அக்கினி ஸ்தம்பம் ஆட்டுக்குட்டி ரூபத்திலும், கழுகு ரூபத்திலும் காணப்பட்டதாகவும், சகோதரர் சிலருக்கு பிசாசுகளை விரட்டும்போது அதிசய ஒளி மேலிருந்து இறங்கி வந்து, இவரை மறைத்துக் கொண்டதாகவும்: சகோதரர் மரித்த ஒருவருக்காக சவப்பெட்டி அருகில் நின்று ஜெபித்துக் கொண்டிருக்கும்போது சவப்பெட்டி மீது அக்கினி ஸ்தம்பம் இறங்கி நின்றதாகவும், இவ்வாறாக பற்பல சம்பவங்கள் நிகழும் நேரத்தில் அக்கினி ஸ்தம்பம் இறங்கி சாட்சி கொடுப்பதாகவும் புகைப்படங்களை பிரசுரிக்கிறார்.

சுருக்கமாகக் கூறப்போனால் எங்கும் எதிலும் அக்கினி ஸ்தம்பம் பிரசன்னம் இவரது ஊழியத்தில் பங்கு கொள்ளுகிறதாம். அக்கினி ஸ்தம்பம் பிரசன்னமாகாத நிகழ்ச்சிகளே இல்லையாம். இவரது வீடு முழுவதும் அக்கினி ஸ்தம்பம் பிரசன்ன நிகழ்ச்சிகள் என எடுக்கப்பட்ட புகைப்படங்களால் நிறைந்திருக்கிறதாம்.

15. அன்று இயேசு நாயீன் ஊரின் வாசலுக்கு சமீபத்தில் வந்தபோது, அங்கு மரித்துப்போன ஒருவனை அடக்கம் பண்ண வருவதைக்கண்டு, பாடை அருகில் வந்து, அதைத்தொட்டு " வாலிபனே எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் " என்றார். மரித்தவன் எழுந்து, உட்கார்ந்து பேசத்தொடங்கினான். லூக். 7:14-15. அடுத்து கல்லறையின் அருகில் பிரசன்னமான தேவன், லாசருவே, வெளியே வா என்று உரத்த சத்தமாய் கூப்பிட்டார். மரித்தவன் வெளியே வந்தான். யோ. 11:43-44. இதுதான் அக்கினி ஸ்தம்பம் பிரசன்னத்தின் மகிமை. தேவபிரசன்னத்தின் மகிமை, அத்துடன் கிரியை அதாவது அற்புத அடையாளங்கள். இதை விட்டுவிட்டு சவப்பெட்டி மீது அக்கினி ஸ்தம்பம் இறங்கி வந்து துக்கம் விசாரித்துச் சென்றது, வெறுமையாய் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது போன்ற புகைப்படங்களை வெளியிடுவது தேவதூஷணம் ஆகும். எங்கும் அக்கினி

ஸ்தம்பம் வெறுமையாய் தோன்றி மறைந்தது கிடையாது. அது தோன்றுவதற்கு காரணம் உண்டு, தோன்றியதைத் தொடர்ந்து கிரியையும் உண்டு. நமது சகோதரர் அக்கினி ஸ்தம்பம் இப்படி தோற்றமளித்தது, அப்படி தோற்றமளித்தது எனக் கூறுகிறாரேயன்றி, அக்கினி ஸ்தம்பம் பிரசன்னத்தை பிரத்தியட்சமாக தன் கண்களால் ஒருகாலும் கண்டது இல்லை. அது தோன்றி என்ன செய்தது என்பதை விவரிப்பதும் இல்லை. அக்கினி ஸ்தம்பம் தோற்றத்தை புகைப்படங்களில் மட்டும் பிரசுரித்துக் கொண்டே செல்கிறார். **சுருக்கமாகச் சொல்லப்போனால் இவரது புகைப்படக்காரர், அக்கினி ஸ்தம்பம் பிரசன்னத்தை தான் எடுக்கும் புகைப்படங்களில் உற்பத்திபண்ணுகிறார், அவ்வளவுதான்.**

16. சகோதரனது மற்றொரு பொய்யையும், புரட்டையும் இங்கு கவனியுங்கள். ஒரு பத்திரிக்கையில் "18.9.197 (பத்திரிக்கையில் கூறப்பட்ட வருடத்தை அப்படியே எழுதியுள்ளேன். இது 1997 ஆக இருக்கவேண்டும்) அன்று நம்முடைய பாஸ்டர் டேனியல் கிறிஸ்டியான் அவர்கள் **தேவ அழைப்புக்கு செவிகொடுத்து எருசலேம் பயணமானார்கள்.**" என எழுதுகிறார். உண்மையாகவே இவர் தேவ அழைப்பின் பெயரிலா எருசலேம் சென்றார்? அப்படியானால் தேவன் எதற்காக இவரை எருசலேமுக்கு அழைத்துச் சென்றார்? இவரை எருசலேம் அழைத்துச் சென்று அங்கு இவரைக் கொண்டு என்ன கிரியை நடப்பித்தார்? **எருசலேம் சுற்றுப்பயணம் செல்லும் ஒரு கூட்டத்தாருடன், காணிக்கை, தசமபாகத்தில் கிடைத்த பொருளாதார வசதியின் நிமித்தமாக, மற்றவர்களோடு ஒருவராக இவரும் சென்று வந்ததுதானே உண்மை. இதை ஏன் மிகைப்படுத்தி பத்திரிக்கையில் எழுதவேண்டும்? அப்படி எழுதினால்தான் பெயரும், புகழும் இவருக்கு வந்து சேரும் என்ற நப்பாசையா?** இவரது இடிமுழக்கம் எதிரொலி பத்திரிக்கையில் வரும் சாட்சிகள் சபை ஸ்தாபன ஊழியர்கள் தங்கள் பத்திரிக்கைகளில் வெளியிடும் சாட்சிகள் ரீதியில் தானே உள்ளது. அநேக சாட்சிகளுக்கு வேதத்தில் எந்தவிதமான அடிப்படை ஆதாரமும் கிடையாது.

17. இந்நிலையில் அக்கினி ஸ்தம்பம் பிரசன்னத்தை உறுதிசெய்வதற்காக சகோ.டேனியலின் புகைப்படக்காரர் உற்பத்தி செய்த அனைத்து புகைப்படங்களின் நெகட்டிவ் பிரதிகளை இரசாயண பரிசோதனைகளுக்கு கேட்டேன். பதில் எதுவும் இல்லை. ஆதலால் அக்கினி ஸ்தம்பம் குறித்து ஒரு ஆங்கில சுற்றறிக்கை வெளியிட்டேன். எதிர்ப்புகள் எதுவும் எங்கிருந்தும் வரவில்லை.

18. இங்கு, இந்த செய்தியை நான் லவோதிக்கேயா சபை தூதனும், தீர்க்கதரிசியுமாகிய சகோ.வில்லியம் மாரியன் பிரன்காம் " மூன்றாம் யாத்திரை / The Third Exodus " தலைப்பில் ஜூன் 30,1963 ல் பிரசங்கித்த செய்தியை அடிப்படையாகக் கொண்டு எழுதுகிறேன். அக்கினி ஸதம்பம் என்றால் என்ன? இது தேவன், It is God. நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினி. The Lord our God is a Consuming Fire. உபா 4:24 , எபி 12:29. அவர் புடமிடுகிறவனுடைய அக்கினியைப் போன்றவர். He is like a Refiner's Fire. மல் 3:2. நித்திய ஜுவாலை. Everlasting Burnings. ஏசா. 33:14

19. அக்கினி ஸ்தம்பம் நிறம் சொகுசாவின் நிறம் என எசே. 1:4 ல் வாசிக்கலாம். இது ஆங்கிலத்தில் Color of Amber என கூறப்பட்டுள்ளது. எசேக்கியேல், கேபார் நதியண்டையிலே கண்ட அக்கினியும் அதைச்சுற்றிலும் பிரகாசமும், அதின் நடுவில் அக்கினிக்குள்ளிருந்து விளங்கிய நிறம் சொகுசாவின் நிறம் ஆகும். ஆக தேவ ஆவியானவருக்குரிய நிறம் அக்கினி மயமான சொகுசாவின் நிறம் ஆகும். இது மஞ்சள் கலந்த பச்சை Yellowish Green ஆகும். அவர் யோவானிடத்தில் வந்தபோது பார்வைக்கு வச்சிரக்கல்லுக்கும் பதுமராகத்துக்கும் ஒப்பாயிருந்தார். வெளி. 4:3. இந்த இரு நிறங்களையும் கலந்தால் அது மஞ்சள் கலந்த பச்சை நிறமாகும்.

20. தேவன் ஒளியாயிருக்கிறார் God is Light. 1யோ. 1:5, 1தீமோ. 6:16. தெய்வ வெளிப்பாட்டில் காணப்படும் மகிமையின் வெளிச்சம்தான் ஒளி. மத். 17:2, அப். 9:3, 12:7. ஆக ஒளியானவர் நம்மிடத்தில் மஞ்சள் கலந்த பச்சை நிறத்தில் வருகிறார். அவரே அந்த ஒளி. ஆக கர்த்தரோடிருக்கிற ஒளியின் நிறம், கர்த்தரைப் பின்பற்றுகிற கர்த்தருடைய ஒளியின் நிறம் மஞ்சள் கலந்த பச்சை ஆகும். அது சொகுசாவின் நிறம் ஆகும்.

21. கர்த்தருடைய தூதனானவர் முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினி ஜுவாலையிலே நின்று மோசேக்கு தரிசனமானார். அவனோடு பேசினார் யாத். 3 : 2 , 4. கர்த்தர் சீனாய் மலையின்மேல் அக்கினியில் இறங்கினார். மோசே பேசினான். தேவன் அவனோடு வாக்கால் மறுமொழி கொடுத்தார். யாத்.19:18,19. ஓரேபிலே கர்த்தர் அக்கினியின் நடுவிலிருந்து இஸ்ரவேல் புத்திரரோடு பேசினார். வார்த்தையின் சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். ஆனால் ஒரு ரூபத்தையும் காணவில்லை. உபா.4:12. தேவன் தம்முடைய மகிமையையும் , மகத்துவத்தையும் காண்பித்தார். தேவன் மனுஷனோடே பேசினார். உபா. 5:24. கர்த்தர் மலையிலே அக்கினி நடுவிலிருந்து முகமுகமாய் இஸ்ரவேல் புத்திரரோடே பேசினார். உபா.5:4,22.

22. சவுல் தன் பிரயாணத்தில் தமஸ்குவுக்குச் சமீபித்த போது சடிதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றி பிரகாசித்தது. அவன் கர்த்தரோடே பேசினான். கர்த்தர் அவனோடே பேசினார். அவனோடே கூட பிரயாணம் செய்தவர்கள் கர்த்தரின் சத்தத்தைக் கேட்டார்கள் ஆனால் ஒருவரையம் காணவில்லை. அப்.9:3-7.

23. அந்த ஒளி நித்திய ஒளியாகும். ஏசா.33:14. இந்த ஒளி இப்பிரபஞ்ச ஒளி அல்ல. மின்சார ஒளி அல்ல, சூரிய ஒளி அல்ல, விளக்கு ஒளி அல்ல. மாறாக நித்திய ஒளி ஆகும். **ஆனால் இந்நாட்களில் மின்சார ஒளியையும், சூரிய ஒளியையும், விளக்கு ஒளியையும் நித்திய ஒளியோடு ஒப்பிட்டு அக்கினி ஸ்தம்பம் தோன்றியது, அதிசய ஒளி தோன்றியது எனக் கூறி மக்களை மயக்குகிறார்கள். இதுதான் மாயையும் மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது.**

24. சகோ.டேனியல் கூட்டத்தார் என்றாவது அக்கினி ஸ்தம்பத்தை பிரத்தியட்சமாக தங்கள் கண்களால் கண்டார்களா என்றால், இல்லை என்பதே பதில். கர்த்தர் அக்கினி ஸ்தம்பத்திலிருந்து, ஒளியிலிருந்து என்றாவது இவரோடு பேசினாரா? அக்கினி ஸ்தம்பத்தோடு இவர் பேசினாரா? இல்லை , இல்லை. அக்கினி ஸ்தம்பம், ஒளி நிறத்தை விஞ்ஞான ரீதியில் நிரூபிக்க இவர் முன் வந்தாரா? இல்லையே ! இதை ஆவிக்குரிய பிரகாரமாவது நிரூபிக்க முன் வந்தாரா? இல்லையே !! எல்லாவற்றுக்கும் மறுபதில் மௌனம் தானா? மோசே, பவுல், பேதுரு, பிரன்காம் அக்கினி ஸ்தம்பத்தை தரிசித்தார்கள். இவர்களது அனுபவங்களோடு, சகோ.டேனியல் அனுபவத்தை ஒப்பிட்டுப் பாருங்கள். அப்பொழுது நீங்கள் எந்த அளவுக்கு ஏமாற்றப்படுகிறீர்கள் என்பது புலனாகும். உலகில் ஏமாளிகள் இருக்கும் வரை ஏமாற்றுக்காரர்கள் இருந்துகொண்டே இருப்பார்கள்.

25. தேவ ஆவியினால் அருளப்பட்ட வேத வாக்கியங்களில் நாம் தேவன் மூன்று யாத்திரைகளில் தன்னை பற்பல வேளைகளில் அக்கினி ஸ்தம்பத்தில் வெளிப்படுத்தி, தம்முடைய ஜனங்களை அதாவது தெரிந்து கொள்ளப்பட்டவர்களை வெளியே அழைக்கிறார் எனக் காண்கிறோம். யாத்திரை என்பதற்கு " வெளியே அழைக்கப்படுதல் ", " வெளியே கொண்டு வருதல் ", "வெளியே எடுக்கப்படுதல் " என்ற பொருள்கள் உண்டு. இந்த மூன்று யாத்திரைகள் சமயத்திலும் தேவன் தம்முடைய தீர்க்கதரிசியை அனுப்பி, அவர்கள் மூலமாக தம்முடைய ஜனங்களை உபத்திரவங்களிலிருந்து, பாரம்பரிய கோட்பாடுகளிலிருந்து தவறான வழிகளிலிருந்து, குழப்பங்களிலிருந்து வெளியே கொண்டுவருகிறார். அப்பொழுது தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகளோடிருந்து, அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும், பலவிதமான பலத்த செய்கைகளினாலும், பரிசுத்த ஆவியின் வரங்களினாலும் சாட்சி கொடுத்து தம்முடைய ஜனங்களை வெளியே அழைக்கிறார், இரட்சிக்கிறார்.

26. தேவன் எப்பொழுதும் மூன்று என்னும் எண்ணிக்கையில் செல்லுகிறார். அவர் மூன்று என்பதில் பரிபூரணப்படுகிறார். மூன்று பிழையற்ற பரிபூரணமான எண். பிதா குமாரன் பரிசுத்தஆவி: ஆவி ஆத்துமா சரீரம்: நீதிமானாக்கப்படுதல் பரிசுத்தமாக்கப்படுதல் பரிசுத்தஆவியின் அபிஷேகம் போன்றன.

27. முதலாம் யாத்திரையில், இஸ்ரவேல் புத்திரர் எகிப்தின் அடிமைத்தனத்தினால் தவித்து, முறையிட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தங்கள் அடிமைத்தனத்திலிருந்து முறையிடும் சத்தம் தேவ சந்நிதியில் எட்டியது. தேவன் அவர்கள் பெருமூச்சைக் கேட்டு, தாம் ஆபிரகாமோடும்

ஈசாக்கோடும், யாக்கோபோடும் செய்த உடன்படிக்கையை நினைவு கூர்ந்தார். தேவன் இஸ்ரவேல் புத்திரரை கண்ணோக்கினார். தேவன் அவர்களை நினைத்தருளினார். யாத்.2:23-25

28. கர்த்தருடைய தூதனானவர், மோசேக்கு ஒரு முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினி ஜுவாலையிலே நின்று அவனுக்கு தரிசனமானார். யாத். 3:2. கர்த்தர் முட்செடியின் நடுவிலிருந்து மோசேயோடே பேசினார். கர்த்தர் எகிப்திலிருக்கிற தம்முடைய ஜனத்தின் உபத்திரவத்தை பார்க்கவே பார்த்து அவர்கள் இடுகிற கூக்குரலைக் கேட்டு, அவர்கள் படுகிற வேதனைகளை அறிந்து, எகிப்தியர் அவர்களை ஒடுக்குகிற நெறுக்குதலைக் கண்டு, அவர்களை எகிப்தியர்களின் கைக்கு விடுதலையாக்கவும், அவர்களை அந்த தேசத்திலிருந்து நீக்கி பாலும் தேனும் ஓடுகிற நலமும் விசாலமுமான தேசத்தில் கொண்டுபோய் சேர்க்கவும் இறங்கினார். யாத். 3:4-9. **ஆம் தேவன் அக்கினி ஸ்தம்பத்தில் முட்செடியின் நடுவில் இறங்கினார்.**

29. பின்பு, தேவன் தம்முடைய மகா பலத்தினாலும், ஓங்கிய புயத்தினாலும் தம்முடைய ஜனத்தை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார். இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலே குடியிருந்த காலம் 430 வருடங்கள். அந்த வருடங்கள் முடிந்த அன்றையத் தினமே கர்த்தருடைய சேனைகள் எல்லாம் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டது. யாத். 12:40,41. கர்த்தர் அக்கினியும் மேகமுமான ஸ்தம்பத்திலிருந்து எகிப்தியரின் சேனையைப்பார்த்து, அவர்களுக்கு விரோதமாக யுத்தம் பண்ணினார். யாத். 14:24,25. **வனாந்திர பிரயாணத்தில் இஸ்ரவேல் புத்திரர் இரவும் பகலும் வழிநடக்கக் கூடும்படிக்கு, கர்த்தர் பகலில் அவர்களை வழிநடத்த மேகஸ்தம்பத்தினாலும், இரவில் அவர்களுக்கு வெளிச்சம் காட்ட அக்கினி ஸ்தம்பத்தினாலும் அவர்களுக்கு முன் சென்றார்.** பகலில் மேகஸ்தம்பமும், இரவிலே அக்கினி ஸ்தம்பமும் ஜனங்களிடத்திலிருந்து விலகிப்போகவில்லை. யாத். 13:21,22. தேவனாகிய கர்த்தர் தம்முடைய ஜனங்கள் பாளையமிறங்கத்தக்க இடத்தைப் பார்க்கவும், போகவேண்டிய வழியை அவர்களுக்குக் காட்டவும் **இரவில் அக்கினியினாலும், பகலில் மேகத்தினாலும் அவர்களுக்கு முன்சென்றார்.** உபா. 1:30,32,33. மேகத்தை மறைவுக்காக விரித்து இரவை வெளிச்சமாக்குகிறதற்காக அக்கினியையும் தந்தார். சங். 105:39. வனாந்தரத்திலே இஸ்ரவேல் புத்திரரை வழிநடத்த பகலிலே மேகஸ்தம்பமும், அவர்களுக்கு வெளிச்சத்தையும் அவர்கள் நடக்க வேண்டிய வழியையும் காட்ட இரவிலே அக்கினி ஸ்தம்பமும் அவர்களை விட்டு விலகவில்லை. நெகே. 9:19. **ஆம், தேவனாகிய கர்த்தர் அக்கினி ஸ்தம்பத்தினாலும் மேகஸ்தம்பத்தினாலும் தம்முடைய ஜனங்களுக்கு முன்சென்றார். பகலில் கர்த்தருடைய மேகமும், இரவில் அக்கினியும் ஆசரிப்புக் கூடார வாசஸ்தலத்தின்மேல் தங்கியிருந்தது. அதை இஸ்ரவேல் வம்சத்தாருடைய கண்கள் யாவும் பிரத்தியட்சமாகக் கண்டது.** மேகம் மேலே எழும்பும்போது இஸ்ரவேல் ஜனங்கள் பிரயாணம் பண்ணுவார்கள். மேகம் தங்கும்போது பாளையமிறங்குவார்கள். மேகம் எழும்பாதிருந்தால் பிரயாணம் பண்ணாதிருப்பார்கள். யாத். 40:35-38.

30. இந்த முதலாம் யாத்திரையின்போது தேவன் தீர்க்கத்தரிசியாகிய மோசேயை அனுப்பி, அவனை அக்கினி ஸ்தம்பத்தினால் அபிஷேகித்து, அவருடைய ஜனங்களை வெளியே அழைத்துவந்தார். ஜனங்கள் தவறாக புரிந்துகொள்ளக் கூடாது எனக்கருதி இயற்கைக்கு மேற்பட்ட, அக்கினி ஸ்தம்பத்தின் அடையாளத்தை தாம் தெரிந்து கொண்ட தீர்க்கத்தரிசியாகிய மோசேக்குக் கொடுத்தார். **அக்கினி ஸ்தம்பம், அபிஷேகம் பெற்றிருந்த ஒரு தீர்க்கத்தரிசியின் மூலம், தெரிந்துகொள்ளப் பட்ட ஜனங்களை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்துக்கு வழிநடத்தியது. அவர்கள் கண்ட அந்த அக்கினி ஸ்தம்பம், அபிஷேகம் பெற்றிருந்த அந்த தீர்க்கத்தரிசியின் தலைமையின்கீழ் வாக்குத்தத்தம் பெற்றிருந்த ஜனங்களை, வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்துக்கு வழிநடத்தியது. இதுவே தேவன் அக்கினி ஸ்தம்பத்தின் கீழ் தொடங்கிய முதலாம் யாத்திரை. உலகப்பிரகாரமான யாத்திரை ஒன்றுக்காக அவர் தமது ஜனங்களை, எகிப்து தேசத்திலிருந்து கானான் தேசத்துக்கு அழைத்துச் சென்றார்.**

31. **மோசே அந்த அக்கினி ஸ்தம்பம் அல்ல. அவன் அந்த அக்கினி ஸ்தம்பம் கீழ் அபிஷேகம் பெற்ற ஒரு தீர்க்கத்தரிசி. அவனையும், அவனுடைய ஊழியத்தையும் அற்புதங்களினாலும், அடையாளங்களினாலும், பலவிதமான பலத்த செய்கைகளினாலும் அக்கினி ஸ்தம்பம் உறுதிப்படுத்தியது. தேவன் தான் அந்த அக்கினி ஸ்தம்பம்.** மோசே, தேவனுடைய ஜனங்களை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்துக்கு வழிநடத்த தெரிந்துகொள்ளப்பட்ட, பிரித்தெடுக்கப்பட்ட பாத்திரம் என்பதற்கு **அந்த அக்கினி ஸ்தம்பம் பரலோகத்தின் சாட்சியாக**

இருந்தது. இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தின், — எகிப்தியர்களின் பாவங்களிலும், வழிபாட்டு முறைகளிலும் ஈடுபட்டிருந்தபோது, தேவன் இந்த முதலாம் யாத்திரையில் இறங்கிவந்து, தம்முடைய ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, அக்கினி ஸ்தம்பத்தினாலும் மேகஸ்தம்பத்தினாலும் அவர்களை வனாந்தரத்தில் வழிநடத்தி, பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்துக்கு கொண்டுவந்து சேர்த்தார். ஒரு இயற்கை தேசத்திலிருந்து தம்முடைய ஜனங்களை வெளியே கொண்டுவந்து மற்றொரு இயற்கை தேசத்துக்குள் வழிநடத்தினார். இந்த முதலாம் யாத்திரை ஒரு உலகப்பிரகாரமான யாத்திரை ஆகும். ஆதி. 12:7.

32. இரண்டாவதாக, இஸ்ரவேல் ஜனங்கள் ரோம சாம்ராஜ்யத்தின் கீழ் அடிமைகளாயிருந்தனர். அவர்கள் உண்மையான தேவாராதனை வழிபாட்டு முறைமைகளை விட்டு அகன்று ரோம கோட்பாடுகளுக்குள் சென்றனர். அப்பொழுது தேவன் இரண்டாம் யாத்திரைக்காக ஒரு தீர்க்கத்தரிசியை அபிஷேகத்துடன் அனுப்பினார். அது அவருடைய நேசக்குமாரன்-தேவன்-தீர்க்கத்தரிசி. அவர் ஒரு தீர்க்கத்தரிசியாக இருப்பார் என்று மோசே முன்னுரைத்தான். உபா.18:15,18,19. இவரை தேவன் பரிசுத்த ஆவியினாலும், வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார். அப்.10:38.

33. இவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சித்ததினால் இயேசு என்று பெயரிடப்பட்டார். மத்.1:21. என் ஜனங்கள் காணாமற்போன ஆடுகள். அவர்களுடைய மேய்ப்பர்கள் அவர்களை சிதறப்பண்ணி பர்வதங்களில் அலையவிட்டார்கள். ஒரு மலையிலிருந்து மறு மலைக்குப் போனார்கள். தங்கள் தொழுவத்தை மறந்துவிட்டார்கள் என்று கர்த்தர் எரேமியா தீர்க்கத்தரிசியைக் கொண்டு உரைத்தார். எரே.50:6. அப்படியாக காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரை இரட்சிக்கவே இயேசு வந்தார். இழந்துபோனதைத் தேடவும், இரட்சிக்கவுமே வந்தார். லூக்.19:10. ஆம், தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளினார். யோ.3:16.

34. இயேசு எல்லா நீதியையும் நிறைவேற்ற வேண்டியதிருந்ததால், அவரும் ஞானஸ்நானம் பெற்று கரையேறின உடனே, இதோ, வானம் அவருக்கு திறக்கப்பட்டது. தேவ ஆவி புறாவைப்போல் இறங்கி அவர் மீது அமர்ந்தார். மத்.3:16. தேவன் இறங்கினார். ஆட்டுக்குட்டியின் மேல் பரிசுத்தஆவி அமர்ந்து அதை வழிநடத்தியது. அதுபோல இன்று சபை மீது பரிசுத்த ஆவி அமர்ந்து அதை ஆயிரம் வருட அரசாட்சிக்கு வழிநடத்தி வருகிறது. அது முதல் இயேசு, மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார். மத்.4:17. இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள். மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறவர்கள் மேல் வெளிச்சம் பிரகாசித்தது. இயேசு சகல பட்டணங்களையும், கிராமங்களையும் சுற்றி நடந்து, ஜெப ஆலயங்களில் உபதேசித்து, இராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து ஜனங்களுக்கு உண்டாயிருக்கிற சகல வியாதிகளையும், சகல நோய்களையும் நீக்கி, அவர்களை சொஸ்தமாக்கினார். மத்.9:35. அவருக்குப்பின் திரளான ஜனங்கள் சென்றார்கள்.

35. இவரைக்குறித்து யோவான் ஸ்நானகன் எனக்குப்பின் வருகிறவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார் என்றான். மத்.3:11, லூக்.3:16. அதன்படி, இயேசு கிறிஸ்துவின் பாடு, மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலுக்குப்பின் பெந்தெகொஸ்தே நாள் அன்று மேல் வீட்டில் ஒருமனப்பட்டு, ஜெபத்திலும், வேண்டுதலிலும் தரித்திருந்த ஏறக்குறைய 120 பேர் மேல் அக்கினி மயமான நாவுகள் போல பிரிந்திருக்கும் நாவுகள் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் அமர்ந்தது. அவர்கள் எல்லோரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள். அப். 2:1-4. பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் ஞானஸ்நானம் பெற்றார்கள். தேவன்-அக்கினி ஸ்தம்பம்-தன்னைப் பிரித்து அங்கு கூடியிருந்த ஒவ்வொருவர் மேலும் அமர்ந்து, சபை காலங்களில் தேவன் ஒரு தனிப்பட்ட நபர் மூலமாக மாத்திரம் அல்ல. பல அவையவங்களைக் கொண்ட அவருடைய சரீரமாகிய சபை மீது அமர்ந்து கிரியை செய்கிறார் என்பதற்கு எடுத்துக்காட்டாக நிகழ்ந்தது.

36. இவ்வவாறாக பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் அபிஷேகம் பெற்றவர்கள் ஜனங்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்றார்கள். அப்.2:38. இந்த வார்த்தையை சந்தோஷமாக

ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார். அப்.2:44. இவ்வாறாக இரட்சிக்கப்பட்ட திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனதுள்ளவர்களுமாயிருந்தார்கள். சகலமும் அவர்களுக்கு பொதுவாயிருந்தது. அவர்கள் எல்லோர் மேலும் பரிபூரண கிருபை உண்டாயிருந்தது. அப்.4:32,33.

37. இதென்ன? தேவன் இறங்கி வந்து தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை ஒரு வகை ஆவிக்குரிய நிலையிலிருந்து அவர்களை வெளியே கொண்டு வந்து பரிசுத்த ஆவியின் அபிஷேகத்துக்குள் வழிநடத்தினார். அப்.19:1-7.

38. தேவன் இறங்கி வந்தார். சவுல் அக்கினி ஸ்தம்பத்தை தரிசித்தான். அப்.9:1-7 அது அவனை முற்றிலும் மாற்றியது. சவுல், பவுல் எனப்பட்டான். இவனை மாற்றுவதற்காகவே தேவன் இறங்கினார். மாறியவன் கிறிஸ்துவுக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டான். அவைகளை குப்பையாக எண்ணினான். தான் அழிக்கத்தேடின விசுவாசத்தை இப்பொழுது பிரசங்கிக்கலானான். பழையவைகள் எல்லாம் ஒழிந்துபோயின. எல்லாம் புதிதாயின. பவுல் அக்கினி ஸ்தம்பத்தினால் மறுவாழ்வு பெற்றான். இவன் புறஜாதிகளுக்கும், ராஜாக்களுக்கும், இஸ்ரவேல் புத்திரருக்கும் கர்த்தருடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக தெரிந்துகொள்ளப்பட்ட பாத்திரமாயிருந்தான். அப்.9:10. ஆனால் இந்நாட்களில் இயேசு கிறிஸ்துவின் பெயரைக் கூறி பணம் சம்பாதிக்கும் தொழிலே பொதுவாக அநேக ஊழியர்களின் ஊழியத்தில் காணப்படுகிறது.

39. பேதுரு சிறைச்சாலையில் இருக்கும்போது கர்த்தருடைய தூதன் அவன் அருகே வந்து நின்றார். அறையில் வெளிச்சம் பிரகாசித்தது. இதென்ன? தேவன் இறங்கினார் அக்கினி ஸ்தம்பம் தோன்றினது. அவனை காவலிலிருந்து விடுதலை பண்ணினார். அக்கினி ஸ்தம்பத்தினால் பேதுரு விடுதலை பெற்றான். அப்.12:5-11.

40. அக்கினி ஸ்தம்பம் எங்கும், ஒருபோதும் வெறுமையாய் தோன்றி மறைந்தது கிடையாது. ஒரு பணியுடன் தோன்றி, பணியை முடித்து தன் ஸ்தானத்திற்கு திரும்புகிறது.

41. ஆக நித்திய ஜீவனுக்கென்று நியமிக்கப்பட்டவர்கள் தங்கள் பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்று, பரிசுத்த ஆவியைப் பெற்று, கர்த்தருடைய சரீரமாகிய சபையில் அவையவங்களாக சேர்க்கப்படுகிறார்கள்.

42. முதலாம் யாத்திரையில் தோன்றிய அதே அக்கினி ஸ்தம்பம், அதே அபிஷேகத்தின் முறை, அதே கிரியை இந்த இரண்டாம் யாத்திரையிலும் காணப்பட்டது.

43. இப்பொழுதும் அவர் இறங்கி, அதே அக்கினி ஸ்தம்பம் ரூபத்திலிருந்து கொண்டு மூன்றாவது யாத்திரையிலும் பங்கு கொள்கிறார். 1933ம் ஆண்டு ஜூன் மாதம் 15ம் தேதி மதியம் சகோ.பிரன்காம் அமெரிக்காவில் ஓகியோ நதிக்கரையில் சுமார் 500பேருக்கு ஞானஸ்நானம் கொடுக்க நின்றுகொண்டிருந்தார். மதியம் சுமார் 2மணிக்கு 17வது நபருக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் சமயம் மேலே பார் என்றதொரு சத்தத்தைக் கேட்டார். பார்த்தபோது தேவன் அக்கினி ஸ்தம்பத்தில் காட்சியளித்தார். தேவன் இறங்கினார். யோவான் ஸ்நானகன் கிறிஸ்துவின் வருகைக்கு முன்னோடியாக அனுப்பப்பட்டதுபோல உன் செய்தி கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடியாக இருக்கும் என்று விளம்பிற்று. சகோ.பிரன்காம் கிறிஸ்துவினுடைய இரண்டாம் வருகைக்கு முன்னோடி அல்ல. அவர் மூலமாக தேவன் கொடுக்கும் செய்தி கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடி. அதாவது மல்.4 மூலம் தேவன் பிள்ளைகளுடைய இருதயத்தை பிதாக்களுடைய இருதயத்திற்கு திருப்புவதற்காக கொடுக்கப்படும் செய்தி. கர்த்தருடைய வருகையின் ஆரவார செய்தி. 1தெச. 4:16

44. அதோடு மட்டுமல்ல 1950 ஆண்டு ஜனவரியில் கூட சகோதரர் தலைக்குமேல் அக்கினி ஸ்தம்பம் இறங்கி நின்றது. தேவன் இறங்கினார். அது புகைப்படமாக்கப்பட்டது. சகோதரர் தலைக்குமேலே வெறுமையான இடத்தில் காணப்படும் ஒளியானது, ஒரு ஒளி, நெகட்டிவ்வில் நேரடியாக விழுந்திருப்பதால் உண்டானதாகும் என்று போலீஸ் துப்பறியும் இலாக்காவினால் உறுதிசெய்யப்பட்டது.

45. மேலும் 1963ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28ம் தேதி சூரியன் அஸ்தமனம் சிகரத்தில் தேவன் இறங்கினார். அந்த அதிசய மேகத்தின் நிகழ்ச்சியை விவரிக்க விஞ்ஞானிகளாலும் முடியவில்லை. நீல வானத்தில் மிகவும் அதிகமான உயரத்தில் மேகங்கள் உண்டாகத்தக்கதான ஈரமில்லாத இடத்தில் இந்த மேகம் தோன்றியது. சர்வ வல்லவரின் அடையாளம் தீர்க்கதரிசியின் ஊழியத்தை உறுதிப்படுத்தியது. இவ்வாறு அற்புதங்களினாலும், அடையாளங்களினாலும், பலவிதமான பலத்த செய்கைகளினாலும், பரிசுத்த ஆவியின் வரங்களினாலும் தீர்க்கதரிசியாகிய சகோ.பிரன்காமின் ஊழியம் உறுதிப்படுத்தப்பட்டது.

46. மற்ற இரு யாத்திரைகளிலும் பங்கு கொண்ட தேவன், அதே அக்கினி ஸ்தம்பம் இந்த மூன்றாவது யாத்திரையிலும் தோன்றி, அதன் கிரியைகளை நடப்பித்தது. விஞ்ஞானத்தின் மூலம் நிதானிக்கப்பட்டது. விஞ்ஞானம் நிரூபித்ததின் மூலமாகவும், பரிசுத்த ஆவி உரைத்த சாட்சிகளினாலும், பரிசுத்த ஆவியின் கிரியைகளினாலும், மகத்தான அக்கினி ஸ்தம்பம் அசைவாடியது. உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் அடையாளங்களும், அற்புதங்களும் ஜனங்களை ஸ்தாபன சபைகளினின்று வெளியே அழைத்து வெளி.18:4, கிறிஸ்துவின் சமூகத்தில் அவர்களைக் கொண்டுவந்து, ஒரு தேசத்துக்குள் செல்ல அவர்களை ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறது. ஏழு முத்திரைகளின் இரகசியம் வெளிப்பட்டதன் பயனாக பிள்ளைகளுடைய இருதயம் மூல பெந்தெகொஸ்தே பிதாக்களின் விசுவாசத்துக்கு திருப்பப்பட்டுக் கொண்டிருக்கிறது.

47. தேவனுடைய வார்த்தைக்கு மக்கள் திருப்பப்படுகிறார்கள். அது இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் என்பதை நிரூபிக்கிறது. அது அவர்களுடைய இருதயத்தில் பரிசுத்த ஆவியின் புதிதாக்குதலைக் கொண்டு வருகிறது. அவர்கள் தேவ ஆவியினால் நிரப்பப்படுகிறார்கள் அவர்கள் தேவன் வாசம் செய்யும் ஆலயமாகக் காணப்படுகிறார்கள். எழுதப்பட்ட நிருபங்களாக காணப்படுகிறார்கள். இவர்களைக் காண்கிறவர்கள் இவர்களில் தேவனைக் காண்கிறார்கள்.

48. இன்றைய ஆவிக்குரிய சந்ததியில் மனித ஞானம் கொண்ட ஸ்தாபன சபைகளினின்று தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் மீது மகிமையான சுவிசேஷத்தின் ஒளி பிரகாசித்தவுடனே அவர்களை சுற்றி இருக்கிற ஸ்தாபன சுவர்கள் இடிந்து விழுகின்றன. கட்டுகள் அவிழ்கின்றன, அவர்கள் வெளியே வருகிறார்கள். ஆவிக்குரிய பாபிலோனிலிருந்து வெளியே வருகிறார்கள். **இந்த மூன்றாம் யாத்திரையில் அக்கினி ஸ்தம்பம் தம்முடைய ஜனங்களை, ஸ்தாபன சபைகளை விட்டு வெளியே வாருங்கள், அந்த பாபிலோனை விட்டு வெளியே வாருங்கள், அவர்கள் குழப்பத்தினின்று வெளியே வாருங்கள் என்று அழைத்துக் கொண்டிருக்கிறது. இந்த மூன்றாம் யாத்திரையின் மூலம் தேவன் தம்முடைய ஜனங்களை பரிசுத்த அபிஷேகத்தினின்று நித்திய தேசத்திற்கு வழி நடத்துகிறார். தம்முடைய ஜீவனை தம்முடைய சரீரமாகிய சபையில் ஊற்றி அதை மகிமைக்கு கொண்டு செல்கிறார். அங்கு அவருடையவர்கள் அவருடன் நித்திய காலம் வாழ்வார்கள்.**

49. இந்நாட்களில் அநேக மூடத்தனமான காரியங்கள் இக்காலத்துக்குரிய செய்தியில் இருக்கிறோம் என்பவர்கள் மத்தியில் நடந்து கொண்டு இருக்கிறது. இவர்கள் மத்தியில் தேவன் தம்முடையவர்களை அடையாளம் காண்பித்து வருகிறார். இந்த மூன்றாம் யாத்திரையில் பிரயாணப்பட்டுக் கொண்டிருக்கும் சபை முடிவில் ஒரு நாள் பூமிக்குரிய இந்தக் கூடாரம், பலவீனமான வியாதியுள்ள இந்த சரீரம் அவருடைய மகிமையின் சரீரத்துக்கு ஒப்பாக மாற்றப்படும். அந்த தேசத்தில் அப்பொழுது அவர் இருக்கிறவண்ணமாகவே நாமும் அவரை தரிசிப்போம். அவருடன் நித்திய காலமாக வாழ்வோம். அல்லேலூயா!.

50. **இந்த கடைசி யாத்திரையில் கைவிடப்பட்டவர்கள் மிருகத்தின் முத்திரையை தரித்துக் கொள்வார்கள்.**

51. முடிவாக, தேவன் இந்த மூன்று யாத்திரைகளிலும் அக்கினி ஸ்தம்பத்தில் தோன்றி, பிரித்தெடுத்த தீர்க்கதரிசியின் ஊழியத்தை உறுதிப்படுத்தி, தம்முடைய ஜனங்களை வெளியே அழைத்து நித்தியத்திற்கு வழிநடத்துகிறார். தேவன் மூன்றில் பூரணப்படுகிறார்.

52. சகோ.டேனியல் கிறிஸ்டியான் உற்பத்தி செய்யும் அக்கினி ஸ்தம்பம்:

அ. ஆவிக்குரிய ரீதியில் அடையாளம் கண்டுகொள்ளப்படவில்லை.
ஆ. தோற்றம் விஞ்ஞான ரீதியில் நிரூபிக்கப்படவில்லை
இ. அக்கினி ஸ்தம்பத்தின் நிறம் இரசாயண ரீதியில் நிரூபிக்கப்படவில்லை.
ஈ. அக்கினி ஸ்தம்பத்தை இவரோ, இவருடையவர்களோ தங்கள் கண்களினால் பிரத்தியட்சமாக ஒருபோதும் கண்டது இல்லை.

உ இவர் அக்கினி ஸ்தம்பத்தை தன் புகைப்படத்தில் மட்டுமே உற்பத்தி செய்கிறார்.

ஊ. அக்கினி ஸ்தம்பத்திலிருந்து தேவன் பேசுவதை இவர்களில் யாராவது கேட்டது இல்லை. எந்தவிதமான வாக்கும் இவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை.

எ. அக்கினி ஸ்தம்பம் பரலோகத்தின் சாட்சியாக தோன்றியதின் நோக்கத்தை இவர்கள் தெளிவுபடுத்தவில்லை.

ஏ. ஆவியின் சாட்சி எங்கும் இல்லை.
ஐ. ஆவியின் கிரியைகள் எங்கும் காணப்படவில்லை.
ஒ. அப்போஸ்தலனுக்குறிய அடையாளங்கள் இவரது ஊழியத்தில் நடப்பிக்கப்படவில்லை.

ஓ. இவருடைய ஊழியம் அற்புத அடையாளங்களினாலும், பலவிதமான பலத்த செய்கைகளினாலும் பரிசுத்த ஆவியின் வரங்களினாலும் உறுதிப்படுத்தப்படவில்லை.

ஔ. இவர் உற்பத்தி செய்யும் அக்கினி ஸ்தம்பம், தேவன் மோசேயோடு, பவுலோடு, பேதுருவோடு, பிரன்காமோடு இடைபட்டதுபோல இவரோடு எங்கும் இடைபடவில்லை. அதாவது தேவன் அவர்களுடைய ஊழியத்தை வழிநடத்தியது போல இவருடைய ஊழியத்தையும் வழிநடத்தவில்லை. அக்கினி ஸ்தம்பம் என்பது இவரது மனோராஜ்யம் தவிர வேறல்ல. இதன் பெயரில் இவர் தனக்கும், தன்னை சார்ந்தவர்களுக்கும் பணம், அந்தஸ்து, உலக ஆஸ்திகளை சம்பாத்தியம் பண்ணிக்கொண்டாரேயன்றி மற்றபடி எடுத்துச்சொல்ல ஆவிக்குரிய காரியங்கள் எதுவுமில்லை. நாட்டில் மதத்தின் பேரில் எத்தனையோ வழிகளில் ஜனங்கள் ஏமாற்றப்படுகிறார்கள். அந்த வழிகளில் இவருடைய தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், இவர் உற்பத்திசெய்யும் அக்கினி ஸ்தம்பம் ஒன்றேயன்றி வேறல்ல. இது சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாக அவர்களுக்கு தேவன் அனுப்பும் கொடிய வஞ்சகமாகும்.

∴ . வேத வாக்கியங்களின் அடிப்படையில், இக்காலத்துக்குரிய செய்தியின் அடிப்படையில் இவரது ஊழியம் இல்லை. இவர் தனது அழைப்பை ஒரு போதும் தெளிவுபடுத்தவில்லை. இவர் தன்னை 5வகை ஊழியங்கள் அனைத்துப் பெயர்களினாலும் அழைத்துக்கொள்கிறார். இது தவறு. 5வகை ஊழியத்தில் ஒருவருக்கு ஒரு ஊழியம் மட்டுமே.

53. இவர் உற்பத்தி செய்யும் அக்கினி ஸ்தம்பம் ஆரோனின் குமாரனாகிய நாதாபும், அபியூவும் உற்பத்தி செய்த அந்நிய அக்கினியேயன்றி வேறல்ல.

54. ஆதலால் புத்தியுள்ளவன் எல்லாவற்றையும் சோதித்தறிந்து நலமானதைப் பற்றிக்கொள்ளக்கடவன். நீங்கள் சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடும் கூட என்றென்றைக்கும் சதாகாலங்களிலும் இருப்பதாக. ஆமென்.

ஆகஸ்ட் 2000

கிறிஸ்துவின் அன்பில்,
சகோ. காலேப் யோசுவா.